www.padippakam.com

France

**பத்திரிகை அறிக்கை**

கடந்த திங்கட்கிழமை 17-09-1984 அன்று, உலகத் தமிழர் மன்றம் (WORLD TAMIL FORUM) தொடக்க விழாவில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அப்பாப்பிள்ளை-அமிர்தலிங்கம், பங்களாதேச விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு நேரடியாகத் தலையிட்டது போன்று, இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காண இந்திய அரசு நேரடியாகத் தலையிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்புணர்வின்றி திரு. அப்பாப்பிள்ளை-அமிர்தலிங்கம் பேசிய இத்தகைய பேச்சைத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அடிப்படையில் இலங்கைத்தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்த உரிமையிழந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் "இலங்கையில் இந்திய இராணுவத் தலையீடு" குறித்துப் பேச உரிமையற்றவர்கள். 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் "சோசலிசத் தமிழீழம்" அமைப்போம் என்று மக்களிற்கு வாக்குறுதியளித்து மக்களின் ஆதரவைப்பெற்று பாராளுமன்றம் சென்ற கூட்டணியினர், இன்றுவரை தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வான நிரந்தர முடிவான "சுதந்திர இறைமையுள்ள சோசலிசத் தமிழீழம்" எனும் மக்களின் முடிவைப் பூர்த்தி செய்ய எந்தவொரு நடைமுறைச் செயலிலும் ஈடுபடவில்லை. மாறாக கடந்த ஆறு வருடமாக ஜெயவர்த்தனாவின் சிங்கள இனவாத பாராளுமன்றத்தில் ஒட்டிக்கொண்டிருந்தார்கள், தமிழீழம் என்னும் கோரிக்கையைக் கைவிட்டால் ஒழிய தாம் பேச்சுவார்த்தைக்கு தயாரில்லை எனக்கூறிய இனவாத ஜெயவர்த்தனா அரசுடன் தமிழீழம் தவிர்ந்த ஒரு தீர்வுதேடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபொழுதே இவர்கள் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தவர்கள் ஆகின்றார்கள். 1977ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை கைவிட்டு விட்டார்கள். அன்றில் இருந்து இன்று வரை சுதந்திரத் தமிழீழப்போராட்டத்தில் எந்த வித பங்கேற்காமலும், வெறும் பார்வையாளர்களாகவும், செய்தித்தாள்களுக்கு அறிக்கைகள் விடுபவர்களாகவுமே செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். சிங்களப் பேரினவாதத்தின் பிடியில் அன்றாடம் அல்லலுறும் தமிழ் மக்களின் துயர்துடைக்க, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வழி நடத்தத் தகுதியற்றவர்களாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இருக்கின்றனர்.

ஜெயவர்த்தனாவின் அரசு ஏற்பட்டது முதலே - இந்த நெருக்கடியான கால கட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி எந்தவொரு போராட்டத்தையும் தலைமை தாங்கி நடத்தவில்லை. இதனால் இவர்களுக்குச் சிறை செல்வது, சித்திரவதைப்படுவது, உயிரிழப்பது போன்ற தேவைகளே ஏற்படவில்லை, இப்போது மட்டுமல்ல கடந்த கால

கூலத்திருக்கட முதலாளித்துவச்சார்பான போக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்காக தீவிர போராட்டங்களை மேற்கொள்ளாமல், அவர்களை அரசியல் ரீதியாக ஏமாற்றியே வந்திருக்கிறார்கள். நாடாளுமன்றப் பதவி பறிபோனதின் பின் இவர்களில் பலர் - அரசியலில் இருந்தே விலகிக்கொண்டதன், இவர்களின் இன்றைய முழுநேரத் தொழில் வர்த்தகமாகவே இருக்கிறது.

எனவேதான் தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணக் கூடிய சோசலிசத்தினை போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லும் நாம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ, போராட்டம் பற்றிப்பேசவோ, இந்த நாடாளுமன்றப் பதவிகளையும் இழந்து விட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கு அருகதையோ அதிகாரமோ இல்லையென அறிவிக்கிறோம்.

பல்வேறு இன்னல்களின் மத்தியில் தமிழீழத்தைத்தவிர்ந்த எந்தவொரு முடிவும் எமது மக்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வைக்கொடுக்காது என்ற உண்மையின் அடிப்படையில் மக்களோடு ஒன்றிணைந்த ஆயுதப்போராட்டத்தின் மூலமே எமது விடுதலையைப்பெற்றெடுக்க முடியுமென்ற நிச்சயமான முடிவில், சிறி லங்கா சிங்கள இனவாத அரசையும், அதன் கூலிப்படைகளையும், எதிர்த்துப்போராடிவரும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும், ஆயுதம் தாங்கிய விடுதலைப்போராட்டத்தை ஏற்றுக் கொண்ட தோழமை இயக்கங்களுமே எமது மக்களையும், விடுதலைப் போராட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்த உரிமையுடையவர்களானவர்கள்.

சிங்கள பௌத்த தேசிய இனவாதத்திற்கு எதிரான, நியாயமான எமது விடுதலைப்போராட்டத்திற்கு, உலகிலுள்ள முற்போக்கு அரசுகளினதும், ஸ்தாபனங்களினதும், உதவியை நாடி நிற்கின்றோம். குறிப்பாக தமிழ் நாட்டு மக்களினதும், இந்திய மக்களினதும் ஆதரவை நாடி நிற்கின்றோம். தமிழ் நாட்டு அரசும், இந்திய அரசும் எமது மக்களின் துயர்துடைக்க எமக்கு உதவ வேண்டும். இது எமது மக்களின் விடுதலைப் போராட்டம். இதை நாமே வழி நடத்திச்செல்ல வேண்டும். எமது மக்களின் இன்னல்களைக் களைந்தெறிய எமது நியாயமான கோரிக்கைகளை மதித்து உதவிடல் வேண்டும். எமது மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் உளத்திடமும் பலமும் எம்மிடம் இருக்கின்றது.

அ. அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு "நிழல் அரசையும்" அமைக்கவிருப்பதாக அறிகின்றோம். தமிழீழ விடுதலைக்கான எவ்வித வேலைத்திட்டங்களோ, போராட்ட நிகழ்ச்சித்திட்டங்களோ, அல்லது அரசியல் - தந்திரோபாயமோ அற்ற இவர்கள் அமைக்கப்போகும் இந்த நிழல்அரசாங்கத்தால், எவ்வித பயனோ, முன்னேற்றமோ ஏற்படப்போவதில்லை என்பதோடு ஏகாதிபத்திய வாதிகளின் கைக்கூலிகள் இடம் பெற்றுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் இந்த மாயத் தோற்றமான 'நிழல் அரசாங்கத்தினால்' தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் முற்போக்கு அம்சங்கள் காட்டிக்கொடுக்கப்படும் என்பதனையும் இவர்களின் இச்செயலை நாம் வன்மையாகக்கண்டித்து ஒதுக்குகின்றோம்.

படிப்பகம்

**உலகத்தமிழர் மன்றம்** (World Tamil Forum)

கடந்த திங்கட்கிழமை கூட்டப்பெற்ற உலகத்தமிழர் மன்றம் வெறும் சுயநல நோக்கங்கொண்ட தனிநபர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத் - தலைவர்களோ, தமிழீழ விடுதலை இயக்கங்களோ பங்குபெறாத இத்தகைய தனி நபர்களின் உலகத்தமிழர் மன்றம் வெறும் வியாபார நோக்கம் கொண்டதே. இது உலகில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு உதவிடமுடியாத ஒரு வியாபார அமைப்பாகும். தமிழீழ மக்களின் எத்தகைய உணர்வையும் வெளிப்படுத்த உரிமையற்ற கட்டமைப்பிலும், சில தனி மனிதர்களும் பங்கேற்றுள்ள இவ்வுலகத்தமிழர் மன்றம் வெளிநாட்டிலுள்ள முதலாளித்துவ வாதிகளின் வியாபார நோக்கிற்கே ஏற்படுத்தப் பட்டுள்ளது. பரந்த உலகில் வாழும் தமிழர்களின் நிலையை வெளிப்படுத்த இச்சிறுபான்மை முதலாளித்துவ வாதிகளுக்கு எந்தவிதம் உரிமையில்லை என தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் வன்மையாகக்கண்டிக்கின்றது. மேலும் தனிப்பட்ட ரீதியாக மிகத் தொகையான பணத்தை லண்டனில்வாழ் தமிழ் மக்களிடம் இருந்து தமிழீழப்போராட்டத்திற்குச் சேர்த்தவர்களும், தனிப்பட்ட ரீதியாக பல வேறு நாடுகளில் தமிழீழப்பிரச்சினையை காட்டிப் பணம் சேகரித்தவர்களும் இவ்வுலக மன்றத்தில் இடம்பெறுவதும் - சந்தேகத்திற்கு இடமானது. மேலும் பொது மக்களின் பணமும் விரயமாக்கப்படலாம் எனத்தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் இத்தனி நபர்களை இனம் காணும்படி கேட்டுக் கொள்கின்றது.

படிப்பகம்